தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ௵ மார்கழி ௴ 9௳ (24-12-'22.) | ப. 34

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 359
(உதவி பத்திராதிபர்)

2. 'ஜஸ்டிஸ்' தலைவர்களும், தேச நன்மையும் ... 360
(R. பஞ்சாபகேசன்)

3. மனிதப் பெருக்கும், ஜீவன சாத னங்களும் ... ,,
(அர்த்த சாஸ்திர நிபுணர்)

4. இளையான்றன்குடி மாறனார் ... 361
(துகளன் எழுதியது)

5. விவசாயமும் ஐக்கிய சங்கங்களும் ... ,,
(ராவ் பகதூர், K. S. வேங்கடராமய்யர்)

6. ஐயனாரின் பதிலுத்தரம் ... 363
(காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தார்)

7. மாமியின் புலம்பல் ... ,,
(B. ராமஸ்வாமி)

8. சோதிடப்புலி சோணாசலம் ... 365
(ஓர் நிருபர்)

9. புயற் காற்று ... ,,
(V. நாராயணையர், M. A., M. L.)

தமிழ் உலகு

(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்

தமிழ் வாரப் பத்திரிகை

பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

'தமிழ் உலகு' காரியாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

சுதேசியமானது ! உபயோகமுள்ளது ! !

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல, ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் டி. சுந்தா வாதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

உம்மிடி
ராமய்யசெட்டி
குருசாமிசெட்டி
கம்பெனி

நம்பிக்கையான நகை வர்த்தகர்கள்
25, சைனுபஜார் ரோட், மதராஸ்

ఉమ్మిడి రామయ్య శెట్టి, గురుసామి శెట్టి
కంపెనీ
నగల వర్తకులు
25, చైనా బజార్ రోడ్డు, మదరాసు.

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமிமுதலியார் எழுதியது

	ரூ.	அ.
இந்திரா பாய் ...	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்		
சுந்தர சிங் ...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை		
அம்புஜாக்ஷி ...	2	0

வி. நாராயணன் கம்பெனி,
4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

24 மணிநேரத்திற்குள் குணம்

உலகப் பிரசித்தி பெற்ற வி. ஜி. என். அவர்களின் ரிங்குவரம் லோஷன் உபயோகிப்பதினால், எல்லாவித படை, எச்சத்தளிம்பு, மேகபடை, இவைகள் 24 மணி நேரத்திற்குள் நீங்கும். நிகரற்ற நற்சாட்சி பத்திரங்கள் பெற்று இருக்கிறது.

புட்டி-1க்கு 0-10-0
சிகப்பு வாசனை சாந்து ,, ,, 0-4-0
கருப்பு வாசனை சாந்து ,, ,, 0-4-0
சிகப்பு மார்கு இங்கி துணிகளுக்கு குறிபோடுவது 0-4-0

கேட்லாக் இனாம்.

மார்டன் அண்டு கம்பெனி,
13, கிருஷ்ணப்ப நாயகன் அகிரஹாரம்,
பிண்டு பில்டிங்குஸ், மதராஸ்.

தமிழகம்.

மலாய் நாட்டின் தனித்தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய் பிரதி திங்கள் வியாழக்கிழமைகள் தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினாங், சிங்கப்பூர், மலாக்கா முதலிய பிரதேசங்களை உளப்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் வந்திருக்கும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கிய மலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர் பத்து ரோட்டில் 186, 188, 190-ம் நெம்பர் கட்டடங்களில் அமைக்கப் பெற்றிருக்கும் இண்டஸ்திரியல் அச்சுக்கூட ஸ்வான்தார் ஸ்ரீமான் சி. செல்லத்தம்பி அவர்களால் தேர்ந்த தமிழறிவாளிகளைக் கொண்டு நடத்தப்படுவது. இஃது மலாய் நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப்பரவுகின்றது. இதன் வருட சந்தா ரிங்கி 10.00 ஆறுமாதத்திற்கு ரிங்கி 5.50. இந்தியா, பர்மா, இலங்கை நாடுகளுக்கு வருட சந்தா ரூபா 15. ஆறு மாதங்களுக்கு ரூபாய் 8.

மானேஜர், "தமிழகம்" ஆபீஸ்'
நெம்பர் 190, பத்து ரோட், கோலாலம்பூர்.

சூளாமணி வசனம்

ஜைன காவியங்களுள் ஒன்றாகிய சூளாமணி இனிய வசன நடையில் யாவரும் எளிதில் படித்து ஆனந்தமடையுமாறு, கடலூர் டவுன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ந. பலராமையர் அவர்களால் இயற்றப்பட்டு உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களில் அரும்பத வகராதியுடன் பிரசுரிக்கப்பெற்றுளது.

"இதன்கண் நிகழும் சொற்றொடர்களும் அரும்பதங்களும் வர்ணனைகளும் மிகவும் சிறந்து பொலிவுற்றிருக்கின்றன. தமிழின் சிறப்பும், தமிழ்மொழியின் இனிமையும், மலரிடை மதுவெனச் சொரிந்து கிடக்கின்றன. இதில் கதா நாயகனை காயாம்பூமேனியான கண்ணனுக்கு உவமைகாட்டியிருப்பது மிகப்பொருத்தமாக இருக்கிறது. இதில் வரும் அரும்பதங்களை விளக்கும்பொருட்டு அரும்பத வகராதி ஒன்றும் இறுதியில் சேர்க்கப் பட்டுள்ளது. சமயத்திற்கேற்ப சூளாமணி காவியத்தினின்று செய்யுள்களும் இடையிடையே முத்தும் பவழமும்போல் அலங்கரிக்கப் பெற்றிருக்கின்றன. இப்புத்தகம் தமிழ்கற்க விரும்பும் ஆடவருக்கும் மகளிருக்கும் ஓர் சிறந்த கைப்புத்தகமாகும்"

பெண் கல்வி

இதன் விலை ரூபா 1-0-0.

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

உலக நடை

[உதவி பத்திராதிபர்]

கயா க்ஷேத்திரத்தில் காங்கிரஸ் மஹாநாடு கூடுகிறது. ஸ்வராஜ்ய புரி வெகு நேர்த்தியாக நிர்மாணிக்கப்பட்டு நம்முடைய புராதன மகிமைகளை நினைவூட்டுகிறது. புனிதமான கயா க்ஷேத்திரத்திற்குச் செல்லும் பாரத மக்களின் மனது நிர்மலமாகிவிடும். மனதில் படிந்திருக்கும் மாசுகளையெல்லாம் களையச் செய்து ஸ்வராஜ்ய புரி நமது தேச பக்தர்களுக்கு நிஜ தேசபக்தியைப் புகட்டும் என்பதில் ஐயமில்லை. மனக் களங்கத்தைப் போக்கிவிட்டு மகா நாட்டிலிருந்து வெளிக்கிளம்புவோர் தேசஸேவையை ஒழுங்கான முறையில் வெகு ஊக்கத்துடன் செய்து முடிக்க முற்படுவார்கள். வெளியுலகத்தாரின் உறுதியின்மையை வெறுத்து காராகிருக வாஸம் செய்யும் நமது மகாத்மாவின் தூய்மை பொருந்திய மனது ஸ்வராஜ்யபுரியில் மகாநாடு கூடும் நாட்களில் உலாவி, ஒத்துழையாமை தர்மத்தை உள்ளவாறு உணர்த்தும்.

இடாலியில் பஸ்விஸ்டி கட்சியார் எவ்வாறு ஆட்சி முறையைக் கைப்பற்றினார்களோ அவ்விதமே நம்தேச ஆட்சியை ஒத்துழையாதார் கவரவேண்டும். இப்போது இருக்கும் அரசாங்கத்தை பேருக்குமட்டும் ஆண்டுவருவதாகச் செய்து உண்மை யாட்சி ஒத்துழையாமையின் நிர்மாண வேலைகளால் நடைபெற்றுவரும்படி செய்யவேண்டும். தேசத்தில் ஸமாதானம், ஒழுங்கு, நியாயம் இவைகளைக் காப்பதற்கே அரசாங்கம் ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸின் நிர்மாண வேலைகளால் இவைகள் காக்கப்படுமாயின், வேறு அரசாங்கம் வேண்டியதில்லை. நிர்மாண வேலைகளைச் செய்யவும் வேலைகள் ஈடேறுவதில் உண்டாகும் இடையூறுகளைத்தடுக்க இடாலியில்போன்று ஆயுதந் தாங்கி போர் புரியாமல் சமாதான வார்த்தைகளால் தடைகளை நீக்க முயற்சிப்பதே நம் காங்கிரஸின் விசேஷ லக்ஷணம்.

மேற்கூறிய நோக்கங் கைகூடவேண்டி சட்டஸபைகளை ஒத்துழையாதார் கைப்பற்றவேண்டிய அவசியமில்லை. உடனேயே சுய ராஜ்யம் சித்திக்க வேண்டுமென்பதுமில்லை. நாளடைவிலாவது சுயராஜ்யம் கிடைக்கக்கூடிய வழியைத் தேடுவதே நமது நோக்கம். சீர்திருத்தச் சட்டம் நமக்கு சுயராஜ்ய மளிக்காதெனக் கண்டுகொண்டோம். சட்டஸபை புகுந்து வேலைகளைக் கெடுப்பதும் நம்மால் இயலாது. விசேஷ அதிகாரங்களை அதிகாரிகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கால தாமதமானாலும் பாதகமில்லை. நாம் இப்போது கைக்கொண்டிருக்கும் உபாயங்களையே மனவுறுதியுடன் கைப்பிடித்து உண்மை சுயராஜ்யமடைய வுழைப்போம். நிர்மாண வேலைகளையும் பல இடையூறுகளுக்கிடையே செய்துவருவோம். அடிமைத்தன்மையை நீக்கவே நோக்கங்கொண்டு உழைக்கும் நமக்கு ஈசனும் அருள்புரிவார். நம்மனச்சஞ்சலமே நமக்கு இடையூறாக இருக்கிறதேயல்லாது, ஒத்துழைப்பாரின் சட்டஸபை தடையாக மாட்டாது.

நாணயங்களை அரசாங்கத்தாராகவே வெளியிட்டு ஜனங்களை ஏற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்த முடியாது. பொன், வெள்ளி நாணயங்களை அவைகளில் பொருந்திய சில அரிய உபயோகங்களைக் கொண்டு ஜனங்களே வியாபாரத்திற்குதவும் ஸாதனங்களாகச் செய்துகொண்டார்களே யல்லாது அரசாங்க நிர்பந்தத்தால் அவைகளை அங்கீகரிக்கவில்லை. நாணயங்கள் எப்போது அவைகளின் உபயோகத்தைச் செய்ய சக்தியற்றதாக ஆகிறதோ, அப்போது அந் நாணயங்களை நிராகரித்துவிட்டு வேறு தகுந்த சாதனங்களைக் கைக்கொள்ளுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஜர்மனியில் மார்க்கு நாணயங்களை அரசாங்கத்தார் உபயோகப்படாதவாறு கெடுத்ததால் வியாபாரிகளும் ஜனங்களும் வேறு தேசத்து நாணயங்களிலே கணக்கிட்டு வியாபாரத்தை நடத்துகிறார்கள். ஆகையால் நாணய நிர்வாகத்தில் தலையிடும் எந்த அரசாங்கமும் மனம் போனவாறு செய்தால் ராஜ்யத்தின் நன்மையைக் கெடுப்பதாகும்.

விளை பொருட்களை அதிகப்படுத்தி அன்னிய நாடுகளுக்கு கடன் ஏராளமாகக் கொடுத்துதவியிருக்கும் யுனைடட் ஸ்டேட்ஸ் கடன்களைத் திரும்ப வாங்கிக் கொள்வதற்குத் தயாராயில்லை. கடன்களை மேல்மேலும் வேறு தேசங்களுக்கும் கொடுக்க ஸித்தமாயிருக்கிறது. ஜர்மனி எவ்வளவு கேடுற்ற நிலையிலிருந்தாலும் அதற்கும் கடன் கொடுக்க முற்படும்வரை அமெரிக்கா விளை பொருட்களில் தேக்கம் பெற்றிருக்கிறது. மனிதர்கட்குள் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இருப்பதுபோல் பல நாடுகளும் வேற்றுமை பட்டிருக்கின்றன. பணம் படைத்தவன் தான் அனுபவிக்கக் கூடிய வரை பொருட்களை உபயோகப் படுத்தி மிகுந்ததை தேவை யுள்ளவர்கட்குக் கொடுத்துதவத் தான் வேண்டியிருக்கிறது. பெண்களை ஈன்றவன் அன்னியர்கட்கு அனுபவிக்க வளிப்பது போன்று இதுவும் ஈசன் செயல்.

காலஞ் செல்லச் செல்ல அரசாங்கக் காரியங்கள் விரிகின்றன. சட்டங்கள் மனிதர்களுடைய எல்லாப் பழக்க வழக்கத்திலும் புகுந்து விதிகளை வரைந்து வருத்தத் துவங்குகின்றன. உண்ணும் போதும், உறங்கும் போதும், பேசும் போதும், பார்க்கும் போதும், கேட்கும் போதும், நடக்கும் போதும் சட்டங்களுக்கு கீழ்ப்படிந்தே நடக்கவேண்டும். சட்ட ஸபைகளும் இடைவிடாது சட்டங்களை எங்கெல்லாம் செலுத்தலாம் என நோக்கங்கொண்டு உழைத்து வருகின்றன. இந்த சட்டஸபைகள் உழைக்கும் உழைப்பைத் திருத்தும் விதிகளோ சட்டங்களோ யார் இயற்றுவதெனத் தெரியவில்லை. சட்டஸபை அநேக வேலைகளைச் செய்திருக்கின்றதென்றெடுத்துரைக்கத் தானோ நம் சென்னை சட்டஸபை சட்டங்கள் மயமாக இயற்றிவருகின்றது. பல வக்கீல்கள் கட்சிக்காரர்களைத் திருப்தி செய்ய வெண்ணி சாக்ஷிகளிடம் பல உபயோகமற்ற கேள்விகளைக் கேட்பதுபோல், நம் சட்டஸபை வோடர்களைப் பல சட்டங்களைக் கொண்டு திருப்தி செய்ய முற்பட்டிருக்கிறதா?

'ஜஸ்டிஸ்' தலைவர்களும் தேச நன்மையும்

[R. பஞ்சாபகேசன்]

இச்சென்னை இராஜதானியில் ஆட்சி முறையைக் கைப்பற்றியிருக்கும் 'ஜஸ்டிஸ்' கட்சியார் செய்துவரும் காரியங்களை விரிவாய் ஆராய்ந்து இவர்களுடைய ஊழியங்கள் எவ்வளவில் நாட்டின் நலத்தைக் கோருவன வாகுமெனக் கண்டறிவோம். நியாயக்கட்சியினர் என்ற உயர் பெயர் இட்டுக் கொண்டு பிராமணர்களுடைய ஆதிக்கத்திலிருந்து பிராமணரல்லாதாரை விடுவிப்பதற் கெனவே இவர்கள் முற்பட்டிருக்கின்றனர். குணங்களால் உயர்வை மதிக்க வேண்டுமே யல்லாது பிறப்பா லுயர்வு உண்டாவதில்லை. முற்காலத்தில் பிராமணர்கள் தங்கள் அனுஷ்டானங்களை ஒழுங்குறச் செய்து கொண்டு நீதிவழி பிறழாமல் சிற்றின்பத்தில் பற்றற்று நற்குணம் பூண்டு நற்செய்கைகளைச் செய்வதே தங்கள் பிறப்பின் பயன் எனக்கொண்டு ஒழுகி வந்ததால் பிறர் மதிப்பைப் பெற்று வந்தனர். இக்காலத்தில் தர்மாசாரங்களைப் புறக்கணித்து காலத்தின் கொடுமையால் தங்களுக்குரிய தொழிலைச் செய்யாதபோது தாங்கள் உயர்குலப் பிறந்தோ ரெனக் கொண்டாடுவது எவ்விதம் தகும். ஆகவே, பிராமணரல்லாதாரின் இயக்கம் முற்கிளம்பியதை பிராமணர்கள் எக்காரணத்தாலும் முறையிடக் காரணமில்லை. பிராமணரல்லாதாரின் இயக்கம் ஓர் வரையறைக் குட்பட்டு நல்வழியில் நன்னோக்கங்களுடன் நடந்து வருமாயின், பிராமணர்களே பெரும்பான்மையோரும் இவ்வியக்கத்திற்கு ஆதரவளித்து வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

பெஸண்டம்மையார் ஹோம் ரூலுக்காக போராடிய காலத்தில் இவ்வியக்கம் வெளிவந்தது. ஹோம் ரூல் பிராமணர்களுடைய ஆட்சி யென்றும், இந்தியர்கள் ஹோம் ரூல் அடைய யோக்கியதையற்றவர்கள் எனவும், 'ஜஸ்டிஸ்' கட்சிப் பிரமுகர்கள் வாதாடினார்கள். இறுதியில் சீர்திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்ததும் பெஸண்டம்மையார் ஹோம் ரூல் கிடைத்து விட்டதெனக் கொண்டாடினார். இந்த ஹோம் ரூல் பிராமணரல்லாதாரின் ஆட்சியாகவே முடிந்தது. எக்காலத்திலும் பிராமணர்கள் ராஜ்யபாரத்தை தாங்களே வகித்து நடத்தியதில்லை. க்ஷத்திரியர்கள் வைசியர்கள் முதலிய பார்ப்பனரல்லாதாரே அரசர்களாகவும் தனவந்தர்களாகவும் விளங்கினர். பிராமணர்களோ இவர்களுக்கு புத்திமதி புகட்டிக் கொண்டு ஏழைகளாக மதிப்படைந்து வந்தனர். இக்காலத்தில் பிராமணரல்லாதார் ஆட்சியில் பிராமணர்கள் பொறுமை யடையவில்லை. க்ஷத்திரியர்களுடைய ஆதீனத்தில் இருக்கவேண்டிய இராஜ்ய பாரத்தை பிராமணர்கள் வகித்து காப்பாற்ற முடியாது. ஆகையால் பிராமணர்களிடம் துவேஷத்தைச் செலுத்தாது தங்கள் குறைகளை நிவர்த்திக்கக் கருதுவோர்களிடம் அன்பே மிகுமல்லாது பகையிருக்கக் காரணமில்லை. இப்போது 'ஜஸ்டிஸ்' கட்சித் தலைவர்கள் பல அநியாய முறைகளில் ஒத்துழையாதாரைத் தாக்கி வருகின்றனர். தங்களுக்கு விரோதிகளான பிராமணர்களை ஒத்துழையாதார்களாக மாறியிருக்கின்றனராம். ஒத்துழையாமைத் தலைவர்களை நிந்திப்பதில் புலிகளாக விளங்குகின்றனர். ஒத்துழையாமை போல்ஷ்விக் புரட்சி போன்றதாம். இவர்கள் வாய் கூசாமல் உபயோகிக்கும் வார்த்தைகளை இவர்களுக்கும் மேலிருக்கும் அதிகாரிகள் ஒருபோதும் உபயோகித்ததில்லை. அவ்வதிகாரிகளுக்கு எவரிடம் உண்மை மதிப்பு வைக்க வேண்டுமென நன்றாய்த் தெரியும். வாய் மொழிகள் எவ்வாறாயினும் ஒத்துழையாமையின் தர்மத்தையும் உண்மையையும் தூய்மையையும் உணராதார் இல்லை.

ஆகவே, பிராமணரல்லாதார் எல்லோரும் தங்கள் தலைவர் சிலரின் அதிக்கிரமச் செயல்களையும் முறைகளையும் திருத்தஞ் செய்து தங்களுடைய உரிமைகளைக் காக்கவும் குறைகளை முறையிட்டுத் திருத்தவும் முற்கிளம்பிய தங்கள் இயக்கத்தை நேரானவழிகளில் செல்லும்படி செய்தால் எவருடைய அன்பையும் பெற்று பயனடையலாம். தேச நன்மையை நாடும்போது இந்தியர்கள் பிளவுபடாமல் ஒத்து நடந்துகொண்டால் நம் முயற்சி பயன்படும். பிராமணராயினும் அல்லாதாராயினும் நம் எல்லோரிடத்திலும் பல பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவினரும் தாங்களே மேலோரெனச் சொல்லி வருகிறார்கள். திருநீறு பூசி, திருநாமஞ் சாற்றி வெளிவேஷம் பூண்டு அந்தரங்க சுத்தமற்று மேலோர் உயர்ந்தோர் எனப் போற்றி வரும் நம் மெல்லோரிடமே சீர்திருத்தங்களுக்குப் பல குறைகள் இருக்கின்றன. இக்குறைகளைக் கொண்டு ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டாமல் ஒழுங்குடன் நடந்து கொள்ள வேண்டுமென்பதை யாவரும் அறிய வேண்டும். நம் ஜாதி முறைமையின் குறைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டுமே யல்லாது, பிறரிடம் சென்று நம் விவாதங்களை முறையிட்டு நம் கௌரவத்தை யிழப்பது தகுமோ. தேச நன்மைக்குப் பாடுபடுபவர்கள் ஒன்று சேர்ந்து பாடுபட்டால், காரியங்கள் சீக்கிரத்தில் கைகூடும்.

மனிதப் பெருக்கும், ஜீவன சாதனங்களும்

[அர்த்த சாஸ்திர நிபுணர்]

உலகத்தில் உணவு பொருட்களின் விளைவு நிலையையும் ஜனஸங்கியையின் ஏற்றத் தாழ்வையும் ஆராயப் புகுந்து பல நிபுணர்கள் பற்பல சமயங்களில் பல உண்மைத் தத்துவங்களை வெளியிட்டிருக்கிறார்கள். சாஸ்திர அறிவைப் புகட்டுவதற்கு கண்களால் பார்த்தறியக் கூடிய வண்ணம் பிரத்தியக்ஷப் பிரமாணங்களைத் தேடுவதே மேனாட்டு அறிவாளிகளின் இயல்பு. இதை முன்னிட்டு அமெரிக்காவில் ரேனார்ட் பேர்ல் என்ற நிபுணர் மானிடப் பெருக்கத்தின் இயல்பை விளக்கும் ஓர் பரீட்சை முறையைச் செய்து வெளியிட்டிருக்கிறார். ஓர் கண்ணாடிப் பாண்டத்தில் சிறிது பாலை ஊற்றி, ஓர் ஆண் ஈயையும் ஓர் பெண் ஈயையும் பிடித்து விட்டு மூடிவிட்டார். காற்றோட்டத்திற்கு வேண்டிய வற்றையும் செய்து வைத்திருந்தார். பிறகு நாளுக்குநாள் ஈக்களின் ஸங்கியை எவ்விதம் ஏறுகின்றதெனக் குறிப்பெடுக்கத் துவங்கினார். கண்ணாடிப் பாண்டமே ஈக்களின் உலகம். அவற்றில் ஊற்றப்பட்ட பாலே அவைகளின் உணவு. இவர் செய்த ஆராய்ச்சியினின்று ஆரம்பத்தில் ஈக்கள் பெருகிவந்து பின்னர் இறப்பதும் பிறப்பதும் ஸமமாக விருந்தது. இதைப் போன்று நம் உலகத்திலும் உணவு பொருட்களின் விளைவு ஒரு வரையறைக் குட்பட்டதே. மனித வர்க்கத்தின் பெருக்கு இக்காலத்தில் ஏறி வருகின்றது. இனி பிறப்பும் இறப்பும ஸமமாக இருக்கிற காலம் ஒன்று வரக்கூடுமென ஊகித்தறியப்படுகிறது. புதிய தேசங்களில் (அதாவது விளைவுக்குரிய பூமி முழுவதையும் உபயோகத்திற்கு எடுபடாத அமெரிக்கா போன்ற சில நாடு

களில்) ஜனசங்கியை வருஷாவருஷம் ஏறுபடுவதையும், மனிதர்கள் பெருகி உபயோகப் படுத்தக்கூடியவைகளை யெல்லாம் உபயோகப்படுத்திய சில நாடுகளிலிருந்து வேறு நாட்டைத்தேடி குடியேறத் துவங்குவதையும் பல நாடுகளில் குடியேற்றத்தைத் தடுக்க சட்டங்கள் இயற்றுவதையும் நோக்குங்கால், ஜனப்பெருக்கத்தைக் குறித்த ஆராய்ச்சிகளைச் செய்து உண்மைகளைத் தெளிவாய் தெரிந்துகொள்ள வேண்டிய காலம் நெருங்கிவிட்டதெனச் சொல்லலாம்.

இளையான்றன்குடி மாறனார்

[துகளன் எழுதியது]

இயலாவிடைச்சென்ற மாதவர்க் கின்னமுதா விதைத்த
வயலார் முளைவித்து வாரி மனையலக் கால்வறுத்துச்
செயலார் பயிர் விழுத் தீங்கறியாக்குமவன் செழுநீர்க்
கயலாரிளையான் குடியுடை மாறனெனுங் கற்பகமே.

திருத்தொண்டர் திருவந்தாதி.

சிவனடியார் யார் வரினும், எதிர்கொண்டு, கைகள் குவித்து நின்று, இனிய மென் மொழிகளால் வரவேற்று, முகமன்கூறி, தம் மனைக்கு அழைத்துவந்து, அவரது பாதாரவிந்தங்களை விளக்கி, ஆசனமளித்து, பூஜித்து இன்னமுது படைத்து, சிறப்பிப்பதே தொழிலாகக் கொண்டவர் இளையான்குடியில் வசித்த மாறனார் என்னும் வேளாளர். ஈகையின் பெருமையாலும் ஈசனாரிடம் வைத்த பேரன்பாலும் இவர் பெருஞ் செல்வந்தராகிப் பல ஆண்டுகள் வாழ்ந்து வருங்கால், செல்வம் மேவிய நாளில் இச்செயல் செய்வதன்றியும் செல்வம் நீங்கிய பின்னும் எப்பாடுபட்டும் அடியாருக்கு அமுதளிப்பது கடனெனக் கருதி நடப்பவர் மாறனார் என்று உலகருக்கு விளக்குவதற்கென்று போலும் இவரிடம் மாறா வறுமை வந்து எய்தியது; வளஞ் சுருங்கிய போதும் மாறனார் மனஞ் சுருங்குமோ? ஈகை பிறவிக் குணமன்றோ ? தனக்குள்ளவற்றை யெல்லாம் விற்றும் கடன்கள் வாங்கியும் அடியாருக்கு உபசரிப்பதைக் கைவிடவில்லை.

இவ்வாறு மாறனார் பலவகைத் துன்பத்திடையும் தொண்டுமுறை வழுவாது நடந்து வரும்போது ஓரிரவு பல நாட்களாய் ஆகாரமின்ற தரும பத்தினியும் தாமும் வருந்தி நித்திரையின்றி ஈசனாரின் குணமே பரவி இருக்கையில், நள்ளிருளில் ஓயாது பெய்யும் மழையில் நனைந்து கொண்டு சிவனடியார் ஒருவர் தம் வீடுநோக்கி வருதல் கண்டு, மாறனார் உடன் எழுந்து எதிர்கொண்டு அழைத்து தம் மனை வந்ததும், அவரது ஈரமேனியை தமது வஸ்திரத்தால் துடைத்து, இருக்கச் செய்து, உட்சென்று மனைவியைப் பார்த்து "அரிசியோ நெல்லோ ஒன்றும் இல்லையே! என்ன செய்வோம்" என்று ஏங்கி நின்றார். கணவன் எப்படி, மனைவியும் அப்படி என்னுமாப்போல், அவருடன் ஏங்கி நின்ற அவரது மனைவியும் சற்று யோசித்து "ஒன்றும் தோன்றவில்லையே, என்ன செய்வதென்று; அண்டைவீட்டாருள்ளும் இனித்தருவார் இல்லையே! பொழுதும் சென்றது, போமிடமில்லை; ஆயினும் இன்று விதைத்த முளைநெல்லை நம் வயல்களினின்றும் பொருக்கிக் கொண்டுவந்தால் அமுது படைத்து அடியார்க்கிடலாம்" என்றாள். உடனே உபாயம் அறிந்தோம் என்று மகிழ்ந்து நள்ளிருளில் பொழி மழையில் கழனி நோக்கிச் சென்றனர் மாறனார்.

முளைநெல்லைக் கொணர்ந்து கொடுக்கவே, அதை அவர் மனைவி ஏற்று, சேறுபோகக் கழுவி, கணவனார் பழைய கூரையின் பகுதியைப் பிரித்து அடுப்பெரிக்கக் கொடுத்துதவ, அதைக்கொண்டு நெல்லை ஈரம் போய்ப் பதப்பட வறுத்து அரிசியாக்கி, பிறகு உலைநீரி லிட்டுச் சமைத்தனள்; கறியொன்று மில்லையே என்று வருந்தாதபடி மாறனார் கொல்லைப்புறத்தில் விளைந்து பருவமாகாதிருந்த கறிவகைகளையும் பறித்து வரவே, அடியார் அமுதுசெய்ய எல்லாம் ஸித்தமாயிருந்தது.

ஆனால் தம்பதி இருவரும் இல்முன் சென்று அயர்ந்து படுத்துக் கிடந்த அதிதியை எழுப்பவே, அவர் சோதிரூபமாய் எழுந்தருளி பார்வதீ சமேதராய் தரிசனங் கொடுத்து நாயனாரின் அரிய அன்பைப் புகழ்ந்தனர்.

கையிற் காசிருக்கும்போது செய்யும் தான தருமங்கள் ஒருவகையாக, கையிலொரு காசுமில்லை கடன்கொடுப்பார் யாருமில்லை என்னும் கஷ்ட தசையிலும் ஈகை மறவாமல் பக்தர்களுக்குரிய உபசாரங்களைச் செய்வதில் சோர்வடையாமல் எவ்வித இடும்பைகள் வந்துற்றாலும் பின்வாங்காமல் மெய்வழி நடப்பதே நல்லோர் இயல்பு. சாப்பாட்டிற்கு அடுத்த அறுவடையில் நெல் விளைந்துதான் ஆகவேண்டும் என்று விதைத்திருந்த முளைநெல்லையும் திரும்ப நள்ளிருளிற் சென்று மழையில் நனைந்து வாரிக்கொண்டு வந்து நாளைக்கென்று பயிரிட்டிருக்கும் காய் கறிகளையும் இன்றே சமைத்து அன்பர்க் கிட வேண்டுமென்ற அவா எல்லோருக்கும் இருக்குமோ ?

நாளை நாளை என்றிருந்து பொருள் தேடுவதே கருத்தாயிராமல் இன்றே செய்ய வேண்டும் இன்றும் இன்னே செய்யவேண்டும் என்று தாம் கொண்ட குணம் குன்றாதவண்ணம் அகாலத்தில் சோதனைபோல் வந்த அதிதிக்கு உதவும் பெருந்தகையாரின் பெருமையை அவர் கதையினின்றே அறியக்கூடியதாயிருக்க வேறு எடுத்துக்கூறவும் வேண்டுமோ?

விவசாயமும் ஐக்கிய சங்கங்களும்.

[ராவ் பகதூர், K. S. வெங்கடராமய்யர்]

நமது நாட்டில் ஐக்கிய சங்கங்கள் (Co-operative Societies) ஏற்படும்படி நமது காருண்ய கவர்ன்மெண்டார் முயற்சி செய்து அநேக இடங்களில் சங்கங்கள் ஏற்பட்டிருப்பது யாவரும் அறிந்த விஷயம். ஷை சங்கங்களினால் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் சொல்ப வட்டிக்கு கடன் கிடைப்பதின் மூலமாய் விசேஷ வட்டி வாங்கும் பணக்காரர்கள் வாயில் அகப்படாதபடி தப்பித்துக் கொண்டு அவர்கள் முன்வந்து கொண்டிருக்கிறதும் நமக்கு தெளிவாய் விளங்குகிறது. ஆனால் பங்குகள் மூலமாய் பணம் வசூல் செய்து உபகாரம் செய்து வரும் ஐக்கிய நாணய சங்கங்களில் விவசாயிகளுக்கு பேருதவி ஏற்பட்டிருந்தாலும் விவசாயிகள் கவனிக்க வேண்டிய விஷயம் முக்கியமாய் ஒன்று உளது.

அதாவது தங்களுடைய நிலத்திலிருந்து உண்டாகக் கூடிய விளைபொருள்களினின்றும் ஜாஸ்தியான வரும்படி சம்பாதிக்க வழி தேடவேண்டியது. ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களில் ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து எவ்வளவு விளைபொருள்கள் உண்டாக்குகிறார்களோ அதில் காலிலொன்று கூட நம் இந்தியாவி

னுள்ள நிலங்களிலிருந்து நமக்குக் கிடைப்பதில்லை. அதற்குக் காரணம் மேற்படி தேசங்களில் Intensive Agriculture அதாவது சாரமான விவசாயம் செய்வதால் தான். அப்படிச் செய்வது அவர்களுடைய சாமர்த்தியத்தையும் விடா முயற்சியையும் மட்டும் பொருத்ததன்று. மற்றொரு காரணமும் உண்டு. அதாவது எப்போதும் உள்ள நிலங்களின் விஸ்தீரணம் அப்படியே இருந்து கொண்டிருந்து ஜனங்கள் வர வர நெருக்கமாய்க் கொண்டு வந்தால் நிலங்களிலிருந்து ஜாஸ்தியான விளைபொருள்கள் உண்டாக்கினலொழிய தேவைக்குப் போதாமல் போய்விடும். ஆகையால் ஜாஸ்தியாய் உண்டாக்கத் தலைப்பட்டு விட்டார்கள். நம் இந்தியாவிலும் ஜன நெருக்கம் நாளுக்கு நாள் ஜாஸ்தியாய்க் கொண்டு வருகிறது. பினங்கு, சிங்கப்பூர், ரங்கூன் முதலான இடங்கள் போல் காடுகளை அழித்து பயிர்ச் செயல் செய்யும்படியான காடுகள் நமது இந்தியாவில் அதிகமாய் இல்லாததினால் நிலங்களுடைய விஸ்தீர்ணத்தை விருத்தி செய்ய இடமில்லை; ஆகையால் நாமும் நிலங்களுக்கு விளையும் சக்தியை ஜாஸ்தி செய்ய முயல வேண்டியதாயிருக்கிறது. எவ்விதம் செய்தால் வரும்படி விருத்தியாகும், என்ன உபாயங்கள் தேடவேண்டும் என்ற விஷயங்களை கவனிக்க வேண்டியதாயிருக்கிறது.

விவசாயத்துக்கு வேண்டிய எல்லாச் சாதனங்களிலும் ஐக்கிய சங்கங்கள் ஏற்படுத்தி, முடைப்படும் மிராசுதார்களுக்கு திரவிய சகாயம் செய்தோ, மற்ற சகாயங்கள் செய்தோ, விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் பக்ஷத்தில் (Intensive Agriculture) அதாவது குறிப்பிட்ட நிலத்தில் விளையும் சக்தியை ஜாஸ்திப் படுத்துவதில் நமக்கு பலன் கிடைத்து நம்முடைய தேசம் க்ஷேமமடைந்து வறுமை யென்பதே யில்லாமல் இருக்குமென்பதற்கு சந்தேகமில்லை.

இது மட்டுமே யல்ல. நமது நாட்டில் உண்டாகும் விளை பொருள்களை நாம் விற்பனை செய்வதிலும் அயல் தேசத்திற்கு ஏற்றுமதி செய்வதிலும் அவரவர்களுக்கு இஷ்டப்படி செய்வதால் நாம் ஏராளமான நஷ்டத்தை அடைகிறோம். லக்ஷக்கணக்கான பருத்திப் பஞ்சுப் பொதிகள் சீமைக்கு ஏற்றுமதியாகி அங்கே போய் நூலாகி நமக்கு வந்து சேருகிறது. அப்படி நூலாகி வருவதில் இந்தியாவிலிருந்து போய் வர ஏற்படும் கப்பல் கேஷுவுடன் வியாபாரிகளின் லாபமுள்பட சேர்த்துத்தானே மறுபடியும் நமக்கு விலைக்குக் கொடுக்கப் படுகிறது. இப்பொழுது தஞ்சாவூர் ஜில்லாவில் உற்பத்தியாகும் ஏராளமான மணிலாக் கொட்டை யென்று சொல்லப்படும் நிலக்கடலை அதாவது வேர்க்கடலை முழுவதும் நாகப்பட்டணம் துறைமுகம் மூலமாய் மார்ஸேல்ஸ் முதலான இடங்களுக்கு ஸ்டீமர் ஸ்டீமராய் ஏற்றுமதியாவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தக் கடலையிலிருந்து எண்ணெயை எடுத்து நம்முடைய உபயோகத்துக்காக நாம் வாங்கும் மெழுகுவர்த்திகள் சோப்புகள் முதலான பல சமான்களாக நமக்கே திரும்பி வருகிறது. முக்கியமாய் கடலை புண்ணாக்கை மாட்டின் தீவனத்துக்காகவும் நிலங்களுக்கு எருவாகவும் உபயோகப்படுத்துகிறார்கள்.

மேற்படி எண்ணெயையும் புண்ணாக்கையும் நாம் உபயோகப் படுத்தினால் மேற் சொன்ன சாமான்கள் நமக்கு எவ்வளவு சகாய விலைக்குக் கிடைக்கும். நம்முடைய கால்நடைகளுக்கு நல்ல தீவனம் கிடைத்து கால்நடைகள் விருத்தியாவதுமன்றி நம்முடைய நிலங்களுக்கு எவ்வளவு சிலாக்கியமான எருக் கிடைக்கும். சொல்ப நிலமுள்ள மிராசுதார்கள் தங்களுடைய அவசரத்திற்குப் பணமில்லாமல் சரியான விலைப்பருவம் வரும் வரையில் பொறுத்திராமல் தங்களுடைய விளை பொருள்களை விற்று விடுகிறார்கள். அப்படி விற்பதினாலும் தங்களுடைய சாமான்களின் விலை முழுவதும் அவர்களுக்கு கைக்கு வராமல் நடுவில் உள்ள தரகர்களோ அல்லது, விளைபொருளாக திருப்பிக் கொடுக்க வேண்டிய தென்ற ஏற்பாட்டின் மேல் கடன் கொடுக்கிறவர்களோ ஏராளமான லாபத்தை அடைகிறார்கள். அவ்வளவு லாபமும் பாடுபட்டுப் பயிரிடும் மிராசுதார்களைச் சேர்ந்த தல்லவா? நமது நாட்டில் உண்டாகும் தென்னைகளிலிருந்து உண்டாக வேண்டிய தேங்காய்களை யன்றி கள்ளு உற்பத்தி செய்வதால் எவ்வளவு நஷ்டம் உண்டாகிறது. மிராசுதார்கள் ஒன்று சேர்ந்து கள்ளு உற்பத்தி செய்ய மரங்களை கொடுக்காமலிருந்தால் கவர்ன்மெண்டார் கள்ளு குடிப்பதை நிறுத்த வேண்டியதற்கு பல உபாயங்களை செய்தும், வர வர ஜாஸ்தியாகிக் கொண்டு வரும் குடியையும் நிறுத்துவதற்கு உபகாரமாயிராதா? அதனால் ஜனங்கள் நடமாடும் பொது இடங்களில் வைத்து வழியில் போகும் மனிதரை கவரும் கள்ளுக் கடைகளை எடுத்துவிட வேண்டுமென்று எண்ணும் கவர்ன்மெண்டாருக்கு நாம் ஒத்தாசை செய்யக் கூடாதா? விளை பொருள்களை விற்பனை செய்வதில் ஐக்கிய சங்கங்கள் ஏற்பட்டிருந்தால் இன்ன காலத்தில் விற்கலாம், இன்ன இடத்திற்கு ஏற்றுமதி செய்யலாம் என்ற பல சௌகரியங்களை அறிந்து செய்வதின் மூலமாய் விவசாயிகள் ஏராளமான லாபத்தை அடையலாம்.

ஆகையால் நாம் செய்யவேண்டியது யாதெனில் கவர்ன்மெண்டாரால் ஐக்கிய சங்கங்கள் ஏற்படுத்தும் விஷயத்தில் நமக்கு புத்திமதி சொல்லி ஒத்தாசை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ரிஜிஸ்டிரார், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டிரார் முதலான உத்தியோகஸ்தர்களைக் கொண்டு ஐக்கிய விவசாய சங்கங்கள் ஏற்படுத்தி, அதற்கு பங்குகள் மூலமாய் சொல்ப மூலதனங்களாவது ஏற்படுத்தி, ஷை சங்கங்கள் இன்னவிதமாக வேலை செய்ய வேண்டிய தென்று ஷை உத்தியோகஸ்தர்களைக் கொண்டு தெரிந்து கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக கூட்டுறவின் பேரில் விவசாயத்தை அபிவிருத்திக்கு கொண்டுவர முயற்சிக்கும் பக்ஷத்தில் விடாமுயற்சியால் நம்முடைய விவசாயமும் ஐரோப்பா கண்டத்தில் உள்ள தேசங்களின் விவசாயத்தைப்போல் விருத்தியடைந்து இந்தியாவின் அனுபோக விவசாயிகளின் பலத்தால் நமது தேசம் எப்போதும் ஒற்றுமையுடனும் க்ஷேமத்துடனும் வர வர பெருகிக்கொண்டு வரும் என்பது திண்ணம்.

வரினு நன்று வெருவிடுதல் கட்டபி
னீரினு மன்றதன் காப்பு.

திருக்குறள்.

"ஐயனாரின் பதிலுத்தரம்

[காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தார்]

மனிதர் வாய்ப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாட்டுக் காரியதரிசியாருக்கு, ஐயனாரின் முன்னோடியாகிய நொண்டிக் கறுப்பண்ணன் எழுதியது :

நேற்றுக் கூடிய அகில உலகச் சிறு தெய்வங்களின் மாபெருங் கூட்டத்தில் தங்கள் கான்பரன்ஸ் நடேவது தீர்மானத்தையும், தங்கள் கடிதத்தையும், படித்துக் காட்டினேன். நிரந்தர அக்கிராசனாதிபதியான ஐயனார், இனிமேல் உங்கள் கூட்டத்தாருக்கு எவ்விதமான துன்பமும் வராமல் பாதுகாப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமென்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள். மேலும் மேற்படி கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கத்தையும் தெரிவிக்கும்படி கட்டளை பிறந்திருக்கிறது. நடவடிக்கை பின்வருமாறு :—

நேற்றிரவு ஒரு மணிக்கு எல்லா உலகத்திலிருந்தும் முக்கியமாகத் தமிழ் நாட்டிலிருந்தும் எல்லாச் சிறுதெய்வங்களும் விஜயஞ் செய்திருந்தனர். எல்லா ஐயனார் கோவில்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். அவர்களுள், மதுரை மொட்டைக் கோபுரம் முனியய்யா, மதுரை வீரசுவாமி ராங்கியம் கறுப்பர், பதினெட்டாம்படிக்கறுப்பர், தேரடிக்கறுப்பர், சோணைக் கறுப்பர், பெரிய கறுப்பர், சின்னக் கறுப்பர், அமராவதிக் கறுப்பர் செங்கிடாய்க் கறுப்பர், ஆகாசக்கறுப்பர், சங்கிலிக் கறுப்பர், பண்ணி வீரப்பர், கொத்தடிக் கறுப்பர், கீரனிப்பட்டி அம்மன், கொன்னையூர் மாரியம்மன் முதலியவர்கள் முக்கியஸ்தர்களாவர்.

குறித்த நேரமாகிய இரண்டு மணிக்கு ஐயனார் எழுந்தருளித் தமது ஆசனத்தில் வீற்றிருந்தார். அவருடன், உலகமெங்கும் புகழ்பெற்று மாகாளரென்ற பெயரைத் தாங்கி விளங்கும் கறுப்பண்ணன் வந்து அடுத்த ஆசனத்தில் அமர்ந்து, எல்லாரையும் பார்த்து, எல்லாருடைய வரவுக்கும் வந்தனஞ் சொல்லிவிட்டு, "மனிதர் வாய்ப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாட்டுத்" தீர்மானத்தைப் படித்துக் காட்டினார். உடனே அக்கிராசனர் மிக்க கோபத்துடன், "இதென்ன அக்கிரமம்! இங்கு கூடியிருக்கிற உங்களை வழிபடும் மனிதர்கள் ஏழைப் பிராணிகளான ஆடு கோழி வகையறாவை உங்கள் பெயரைச் சொல்லிக் கழுத்தறுப்பதாகவும், அதைத் தடுக்கவேண்டுமென்றும், கைலாசம் வைகுண்டம் பிரமலோகம் விநாயக குமாரக்கடவுள் திருச் சன்னிதானங்களிலிருந்து தந்தி மேல் தந்தி வந்து கொண்டிருக்கின்றன. இந்த மண்ணுலகத்திலுள்ள நமது பக்தர் பலர் மனம் நொந்து கடிதங்களெழுதியிருக்கிறார்கள். காரியதரிசியின் கடிதத்தையும் கான்பரன்ஸ் தீர்மானத்தையும் படிக்கக் கேட்டீர்கள். மகா விஷ்ணுவுக்கும் சிவபெருமானுக்கும் பிள்ளையாகிய எனது கூட்டத்தாராகிய நீங்கள் அனைவரும் சைவராக விருந்தும் ஏன் கொலையை விரும்புகிறீர்கள்?" என்று கண் சிவக்கக் கேட்டார். அந்தச் சபையிலிருந்த யாவரும் நடுங்கிப் போய்விட்டார்கள். ஒருவருக்கும் பேச நாவெழவில்லை. அங்கிருந்த பேச்சியாயி எழுந்து ஐயனாரை வணங்கி "சுவாமி! அடியார்களை மன்னிக்க வேண்டும்; தெரியாத்தனத்தால் குற்றஞ் செய்து விட்டோம்; பொறுத்தருளவேண்டும்; நாங்கள் இதுவரை யாரிடத்தும் ஆடு கோழி கேட்டதே கிடையாது; ஆனால் அவர்கள் எங்களுக்குத் திருவிழாக் கொண்டாடும் பொழுது, சோறு பழம் இளநீர் தேங்காய் கரும்பு முதலியவற்றை வைத்துப் படைக்கிறார்கள். அவர்கள் மாமிசம் புசிக்கிறவர்களா யிருக்கிறபடியால் தாங்கள் சாப்பிடுவதையும் சேர்த்து வைக்கிறார்கள். அப்படியே வழக்கமாக மற்றவர்களும் செய்ய முற்படுகிறார்கள். நாங்கள் பழம் முதலியவற்றையாவது மாமிசத்தையாவது விரும்பிச் சாப்பிடுவதில்லை. அவர்கள் எங்களிடத்தில் வைத்திருக்கிற பக்தியை மட்டுந்தான் ஏற்றுக்கொள்கிறோம். இதுதான் உண்மை. அவர்களாகவே அவர்களுக்குப் பிரியமானவைகளை யெங்களுக்கு முன்னால் வைத்துவிட்டு அவர்களே உண்ணுகிறார்கள்; அவற்றுக்கும் எங்களுக்கும் சம்பந்தமேயில்லை" என்று சொன்னார்கள். உடனே ஐயனார் மகிழ்ந்து, "அம்மா! போனது போகட்டும்; இனிமேல் உங்கள் பெயரைச்சொல்லி யாரும் எந்த உயிரையும் கொலை செய்யக்கூடாது! இந்த உத்தரவை மீறினால் பொறுக்க முடியாத கோபத்துக் குள்ளாவீர்கள். ஜாக்ரதை!" என்று ஆஞ்ஞையிட்டார். எல்லாத் தெய்வங்களும், "இனிமேல் நமது பெயரைச் சொல்லிக் கொலை செய்தால் அவர்கட்கு அருள் புரிவதில்லை; பால பழம் மாவிளக்கு பொங்கல் இளநீர் பானகம் முதலியன வைத்து பக்தியுடன் வணங்குபவருக்கே வேண்டிய உதவி புரிவது" என்று தீர்மானித்துக் கொண்டு அவரவரிருப்பிடஞ் சென்றனர்.

மாமியின் புலம்பல்

[B. ராமஸ்வாமி]

"அடீ! சண்டாளி!! உனக்கென்னடீ தைரியம்!!! கக்ஷிக்காரனிடமிருந்து ஐந்நூறு ருபாய் வந்ததாம். அதை மூடினாற்போல வாங்கிக்கொண்டாளாம். நாணு (சமையற்காரன்) சொல்லுகிறான். ஐயோ! என்குழந்தை சுப்பண்ணா (சுப்பிரமணியன்) வோ பரம ஸாதுவாச்சே. கிளியை வளர்த்து பூனைக்கு இரையிட்டேனே. இரண்டு நாளாய் கொஞ்சம் நல்லவள்போல கொஞ்சிக்கொண்டும் சிரித்துக் கொண்டும், வளையவந்தாளே. புலி பதுங்கினால் பாய்வதற்கென்று சொல்லுவார்களே. இப்போது தான் தெரிந்தது. ஸாவித்திரியின் இரண்டு வயசுக் குழந்தைக்கு ஒரு மாங்காய்மாலை செய்யவேண்டுமென்று மூன்றுமாசமாய் முறையிடுகிறது' இவள் காதில் விழுந்ததா. என் குழந்தைக்குத் தெரியாமலாபோகும்; இந்தச் சின்னச்சிறுக்கி செய்கிற அட்டூழியம்" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

"எங்கப்பா தாசில் பண்ணிப் பாழுங் கிணற்றில் தள்ளுவதற்குப் பதிலாக இந்தக் குடும்பத்திலே என்னைத் தள்ளினார். நான் வரும்போது இவருக்கு 'மெட்ரிக்புலேஷன்' கூடத் தேறவில்லை. நானில்லாமல் போனால் இவள் மூஞ்சிக்கு அதிர்ஷ்டமேது. என்னிக்கோ வாசிக்க வைத்தாளாம். மாமியாராம் ஒரு பிசாசு. கடுகடுவென்று எள்ளும் கொள்ளுங்கலந்து வெடிக்கும் மாமனாரொருவர். அவலக்ஷணம் போல நாத்தி யொருத்தி. வெறுந்தடியனாய் ஒரு மச்சினன். எல்லாமாய் வளைந்துகொண்டு பிராணனை எடுக்கிறதுகள். இந்தச் சனியன்கள் எப்போ தொலையுமோ" என்று தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள், நாட்டுப்பெண் மீனாக்ஷி.

சுப்பண்ணா வென்ற சுப்பிரமணியன் சாந்தகுண பூஷணன். எம். ஏ., எம். எல்., பட்டம் பெற்ற நியாயவாதி. வயது முப்பத்திரண்டு. நியாய ஸபையில் தேன்மாரி பொழிந்தால்போல் பேசுந் திறமை வாய்ந்தவன். உள்ளதை உள்ளபடி உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துரைப்பவன். இவனது அடக்கமும் பொறுமையும் இவன் பேசும் விமரிசையும் நியாயாதிபதி மனதில் பசுமரத் தாணிபோல் பதிந்துவிடும். இதை யறிந்து இவனிடம் வரும் கக்ஷிக்காரர் பலர். இவன் வேலைக்கு ஓய்வே கிடையாது. சுமார் மூவாயிரம் ரூபாய் மாதமொன்றுக்கு வருமானம் வரும்.

இன்னும், தன் மாங்கல்யத்தைத் தவிர மற்றவைகளை யெல்லாம் விற்றுத் தனக்காகப் பாடுபட்ட தாயினிடத்திலும், நல்லறிவைப் புகட்டிய பிதாவினிடத்திலும் இவனுக்கு அத்யந்தம் ப்ரேமை. இவர்கள் மனஸ்ஸு திருப்தியடைந்தால் ஈசுவரனும் திருப்தியடைகிறானென்ற நிச்சய புத்தி இவனுக்குண்டு. பெற்றோரையும் மற்றோரையும் விட்டுத் தன்னையே நம்பிவந்த பார்யை யிடத்திலும் வாஞ்சையுள்ளவன். தாயைப்போல் தாரமல்லவா. துணி, மணி, அத்யந்தம் பிரீதி இவைகளால் அவளைத் திருப்தி பண்ணிவைப்பதே புருஷார்த்தமென்ற நினைப்புள்ளவன். தன்னுடன் பிறந்தவர்களையும், பந்துக்களையும் ஆதரிக்கவேண்டியது தன் கடமையென் றறிந்தவன். இவைகளுக்கு ஸாதனமான திரவியத்தைச் சேகரிப்பதில் முக்கிய நோக்கமுள்ளவன்.

இவன் தகப்பனார் பழுத்த கிழவர்; குறுகிய உருவினர்; கூரிய அறிவினர்; அஞ்சா நெஞ்சினர்; அழுக்கா றற்றவர்; நியாயா நியாயங்களை சீர்தூக்கி உலகத்தை யனுசரித்து நடப்பவர். ஸாவித்திரியோ, நமது சுப்பண்ணாவின் தங்கை. பதினெட்டு வயதில் புருஷனைப் பறி கொடுத்தவள். 'எல்லாமென யாளு மீசன் செய' லென்றுன்னி, இனி வருஞ் ஜன்மத்திலாவது சதிபதிக ளிரண்டுபேரும் சேர்ந்து நீடூழி வாழ்ந்து தாம்பத்திய தர்மத்தை நடத்தி மோக்ஷத்தை யடைவோமென்று திடமான நம்பிக்கையோடு அல்லும் பகலும் அர்த்த நாரீசுவரனை ஆராதித்துக் கொண்டிருப்பாள். தன் மதினியின் படபடப்பினாலோ, அல்லது உலகத்தின் கொடுமையாலோ தனக்குப்பொறுக்க முடியாத துக்கம் நேர்ந்தால் தன் குழந்தையையாவது, தன் அண்ணாவின் குழந்தையையாவது மார்போடணைத்து, இறுகத் தழுவி முத்தமிட்டுக்கொண்டே கண்ணீரைக் கலகலவென்று உகுத்துத் தன்னைத்தானே தேற்றிக்கொள்வாள். நாதனிறந்த பின்பு இந்தக் குழந்தைகளிடத்தில் தன் அன்பெல்லாவற்றையும் பங்கிட்டுக் கொடுத்துவிட்டாள்.

இப்படியிருக்க, ஒருநாட் சாயங்காலம் ஆறரை மணிக்கு மைலாப்பூர் ஸௌந்தரீ வனத்தினின்று தங்கள் பங்களாவைவிட்டு 'மோட்டார்' வண்டியேறி, கடாலீசுவரன் கோவிலுக்கு வந்தார்கள். அன்றையதினம் கிருத்திகை. ஸ்வாமிக்கு அலங்காரம் நடந்துகொண்டிருந்தது. தரிசனத்திற்குத் தாமதித்தது. வெளியில் வந்தார்கள். கோவிலுக்கு முன் மண்டபத்தில் திரிதண்ட சந்நியாசி ஒருவர் உபதேசஞ்செய்து கொண்டிருந்தார். ஆணும் பெண்ணும் சுமார் முன்னூறு பேர்கள் கூடியிருந்தார்கள். இவர்களும் அவ்விடம் சென்றார்கள். உபதேசம் முடியும் சமயம். சந்நியாசி முடிவுரையாகச் சொன்னதாவது:

“குழந்தைகளே! உங்களில் ஒவ்வொருவரும் கிருகஸ்த தர்மத்தை அவலம்பித்துக்கொண்டே ஜனகாதிகளைப்போல் ஞானத்திற்கு அதிகாரிகளாகக்கூடும். இதில் சந்தேகம் வேண்டாம். சர்வ ஜாக்கிரதையாக சாஸ்திரங்களின் சாரத்தைக் கிரகிக்கவேணும். மூங்கிற் புற்களைப்போல் ஒன்றோடொன்று உரசிக்கொள்வதி லுண்டான நெருப்பினால் தாங்களே எரிந்து சாம்பலாய் விடுவதுபோல, குடும்பங்களில் கலக கல்யாணிகளென்று பெயர்படைத்த ஸ்திரீகளினால் குடும்பங்கள் நிலைகுலைகின்றன. 'நம்முடைய நிஜஸ்திதி என்ன, எங்கே வந்தோம், எங்கே போகிறோ'மென்று நீங்கள் விசாரிக்க வேண்டிய தவசியமாகும். ஏனெனில் ஜீவிய தசையில் நம்மையே பார்த்துக்கொள்வோம். நமது சரீரமோ எலும்பு, நரம்பு, தசை, ரத்தம் முதலியவைகளின் தொகுதி. இதில் பிராணன், மனசு, புத்தி இவைகள் சேஷ்டிக்கின்றன. எவனால் இவைகள் பிரகாசம் பண்ணப்படுகின்றனவோ அவன்தான் ஆத்மா. ஒவ்வொரு ஜீவனும் அததன் கர்மத்திற் கேற்றவாறு நாநா ரூபங்களை அடைகிறது. இதில் வாஸனா மயமான மனஸ்ஸு ஜீவனோடு சேர்ந்து சலிக்கிறது. நம்முடைய பூர்வ வாஸனை நம்மைத்தூண்ட நாம் சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தங்களென்ற விஷய ஸுகங்களில் ஈடுபடுகிறோம். இதினால் நமக்குக் காமம். காமத்தினால் கர்மம், கர்மத்தினால் சரீரம், இதில் அபிமானம், இந்த அபிமானத்தினால் (ஜனன மரணமாகிற) சம்சாரம். இந்த ஸ்தூல சரீரத்திலிருந்து ஜீவன் வெளியேறி விட்டால் சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் பஞ்சபூதங்களில் லயமாகிவிடுகிறது. திரும்பத் திரும்ப பார்த்த (ஸ்திரீ) ரூபத்தையே பார்க்கிறோம்; கேட்ட கானத்தையே கேட்கிறோம், ருசி பார்த்த பதார்த்தங்களையே புசிக்கிறோம். ஒரு விசேஷத்தையுங் காணோமே. இப்படியாக நம்முடைய மனஸு நமக்குச் சத்துருவா யிருக்கிறது.

இந்த மனதே நமக்கு மித்திரனுமாகிறான். எப்படியெனில், மனதினின்று விஷய சுகத்தை விலக்கி பகவானின் லீலைகளை குருமுகமாய் கேட்டு சிரவணம் பண்ணவேணும். நாளடைவில் வைராக்கியமுண்டாகும். அயோக்கியமான தேகாபிமானம் குறையத் தலைப்படும். கிரமமாய் பக்தியுண்டாகும். ஞானமும் வந்துவிடும். ஞானம் வர இந்த ஜீவன் மோக்ஷம் (விடுதலை) அடைகிறான். ஆகையால் நீங்கள் எப்போதும் சலிக்குந் தன்மையுள்ள மனதை, அநித்தியமானதும், ப்ரகாசமில்லாததும், துக்க ஹேதுவானதுமான சம்சாரத்தில் உழலவிடாமல் சத்தியஞான மநந்தமான பிரஹ்ம வஸ்துவினிடத்தில் நிறுத்த முயலுங்கள்” என்று உபதேசத்தை முடித்தார்.

கூட்டங் கலைந்தது. நமது நண்பர்களெல்லோரும் சுவாமி தரிசனம் செய்துவிட்டு ஸௌந்தரீ வனத்திற்குத் திரும்பினார்கள். அம்பாள் கிருபையினாலும் இவர்கள் கேட்ட உபதேசத்தினாலும் அவரவர்கள் மன நிலைக் கேற்றவாறு பலனையடைந்தார்கள். அன்று முதல் இந்தக் குடும்பத்தில் ஒற்றுமைக்கும் சமாதானத்திற்கும் அளவேயில்லை.

சோதிடப்புலி சோணசலம்

[ஓர் நிருபர்]

ஸ்ரீமான் "ராமசந்திரர்" அவர்களுக்கு ;

ஐயா, இத் 'தமிழ் உலகி'ல் தாங்கள் இதுகாறும் எழுதியவைகளுள், நமது சோதிடப்புலியைப் பற்றிய கதைதான் மிகவும் வியக்கத்தக்கதாய் இருக்கின்றது. அவருடைய புத்தி, யுக்தி, சாமர்த்தியம், இவைகளைப் பார்க்கிலும், அவரது அதிருஷ்டமே ஆச்சரியமென நினைக்கிறேன். ஏனெனில், சக்தியற்றதொரு மனிதனிடம் ஓர் கடும்புலி எப்பொழுதாவது கிருபைகூர்ந்ததுண்டோ? 'சோதிடப்புலி' யென்றால், அவருக்கல்லவோ தகும்? முற்றிலும் புஸ்தகங்களைப் படித்து அவைகளிலேயே உழலுவதின்றி, தனது லோகாநுபவத்தால் எல்லா விஷயங்களிலும், ஆழ்ந்த அறிவுடன், தத்வத்தை அவர் எளிதில் கண்டு பிடிக்கின்றார். அவருடைய பழக்கத்தை நான் கவர விரும்புகிறேன். சோதிடத்தில் பைத்தியம் பிடித்து, இக்காலத்தில் எவனும் அலைந்து திரிவதை நோக்கின், என்னையும் அப்பித்தர்களுள் ஒருவனாகவே தாங்கள் மதிக்கக்கூடும்; ஆயினும் அப்படிச் சொல்வதிற்கில்லை. சில தினங்களுக்கு முன், நமது பத்திரிகையில், 'பத்திராதிபர் பாட்ராசாரியா'ரென்பவரைப் பற்றி இச் சோதிடப்புலி, கூறியிருப்பதானது நன்கு கவனிக்கத் தகுந்ததென பலர் எண்ணலாம். நானும் அப்படியே எண்ணுகிறேன். ஆகினும், அவர், தனது படிப்பைக்கொண்டே, அவ்வாறு நுண்ணறிவுடன் அப் பலாபலன்கள் சொல்லிவிட்டாரென நான் முழுவதும் நம்பமுடியவில்லை. 'பாட்ராசாரி'யின் குணகுணங்களை அவர் ஒரே நொடியில் அறிந்து, அதற்கு மேல்தான் தனது சாஸ்திரஞ் ஞானத்தையும் உபயோகித்திருக்கவேண்டும்; அஃதல்லாது வேறு விதமாய் அவர் சோதிடம் இருக்கமாட்டாது. சனி நாடி எழுதப்பட்டபொழுது, எந்த தேசத்திலாவது பத்திரிகைகளும் பத்திராதிபர்களும் இருந்ததுண்டோ? ஆதலால், 'பயிலுறு தமிழிற்கோர் பத்திரிகையேதான்' என்று நமது சோணசலம் யுக்தி விசேஷத்தால் சிருஷ்டித்திருக்கவேண்டும்.

ஐயா, இக்காலத்தில் நமது தேசத்தின்கண் நூறில் ஒருவரேனும் தன் கண்களைத் திறந்து பார்க்கக் கற்றுக்கொள்வதில்லை. மேல் நாட்டுப் படிப்பில் தேர்ச்சி யடைந்தவர்களே தம்மைச் சுற்றிலும் நடப்பதை நன்றாய் அறிவதென்பது அபூர்வமா யிருக்கின்றது. அப்பொழுது சோதிடர்கள் மாத்திரம் உலகஞ் ஞானத்தை அடைவதெங்ஙனம்? பெரும்பாலும் சோதிடம் சொல்பவர்கள் எல்லாம் முற்றும் கண்மூடிகளாகக் காண்கிறார்களே ஒழிய, தமது சாஸ்திரம் எவ்வளவு உயர்ந்ததென்றும், மேலும் சோதிடமென்றால் அதற்கும் ஸகல கலா ஞானமும் அவசியமென்றும் அவர்கள் உணர்ந்தவரெனத் தோன்றவில்லை. ஆதலால்தான் நமது சோதிடப்புலியை நான் நிரம்பவும் மதிக்க வேண்டியதாய் முடிகின்றது.

அவரிடம் சில கேள்விகளுக்குத் தாங்கள் உத்தரம்பெற்று, அவற்றை தயவுசெய்து சீக்கிரம் தெரிவிக்கப் பிரார்த்திக்கிறேன். என் சம்பந்தமாய் ஒன்றுமில்லை. ஆகிலும் நமது பாரதநாட்டின் நிமித்தம் சில கவலைகள் என் மனதை வெகுகாலமாய் வருத்திவருகின்றன; அவைகளைத் தீர்த்துக்கொள்ள நினைக்கின்றேன். சோணசலம் ஒருவர்தான் என் கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியும். தவிர, தங்களுக்கும் அக்கவலைகள் யுக்தமெனத்தோன்றும். இல்லாவிட்டால், 'மரமாம் பழம்,' 'கனவோ, நினைவோ,' 'பைங்கிளி இரங்கல்,' 'ஆவிந்நிரை,' 'வயிற்றின் கொடுமை,' முதலிய விஷயங்களைத் தாங்கள் அவ்வளவு நேர்த்தியாகவும், அவ்வளவு அர்த்த புஷ்டியோடும், எழுதக்கூடுமா? இவ்விந்தியாவுக்கு ஸ்வய ஆக்ஷி ஸ்வாதீனம் எப்பொழுதாவது கிடைக்குமா? மகாத்மா காந்தி இன்னும் எவ்வளவு வருஷம் ஜெயிலில் கிடக்கப்போகிறார்? ஆங்கிலேயர்களாகிய தேவர்களுக்கு நம்மிடம் என்றைக்கேனும் தயவும் வருமோ? இவைகளுக்கெல்லாம் நமது சோதிடப்புலியிடம் கலந்து ஆலோசித்து எழுதவேணும். அவரிடம் எனது நமஸ்காரத்தைத் தெரிவிக்கவும். கேவலம் ஓர் மிருகமான புலியிடமிருந்து, லோகோபகாரார்த்தமாய், உபதேசம் பெற்றவரா என்னிடம் திரவியத்தை அபேக்ஷிப்பார்? நமது சோதிடப்புலியின் தேச பக்தியையும், தேச விசுவாசத்தையும் என் நண்பரான வைத்ய சிம்மம் வைகுண்ட நாதர் நேற்றைய தினம் மிகவும் புகழ்ந்து பேசினார்.

மற்றொரு விஷயத்தைப் பற்றியும் அவரைத் தாங்கள் கேட்கவேண்டும். இத் 'தமிழ் உலகெ'ன்னும் பத்திரிகை என் மனதைக் கவர்ந்துவிட்டது. அப்பத்திரிகை இன்னமும் நெடுநாள் ஜீவித்திருக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். அதைப்பற்றியும் அவசியமாய்த் தாங்கள் சோணசலத்தைக் கேட்டு எழுதவும்.

தங்கள்,

பாலாஜிநாத் மௌட்டியநாத் திகம்பரநாத்.

புயற் காற்று

[V. நாராயணையர் M. A., M. L.]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அநந்தபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை ஸ்ரீராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்யாணகாலத்தில் தன்புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறுஒருவர் மனைவி என்றும் அறிய,அவளைப்பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும் வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி நாடி கல்யாணத்திற்கு உடன்பட்டதும்; கல்யாண தினமும் குறிப்பிடப்பட்டு, உறவினர்களுக்கு அழைப்பு கடிதங்கள் அனுப்பிய பின்னர்,கமலாவை பள்ளிக்கூட விடுமுறை நாளானதால் வீட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென்று உபாத்தியாயினியிடமிருந்து கடிதம் அடைய,கமலாவின் கதையை இதுவரை வெளியிடாத இராமேசன் ஒன்றும் தோன்றாது கலங்கி, பிறகு கல்யாணதினத்தை ஒதுக்கிவைக்க அநந்தபாபுவை வேண்டியதும், அவர் அதற்கு கடைசியாக உடன்பட்டுவிட்டதும்; பிறகு வெளியூருக்குச் சென்றிருந்த யோகேந்திரன் வந்து கல்யாண காரியங்கள் நடைபெறாததைக் கேட்டு, கவலையுற்று, அக்ஷயனுடன் ஸ்ரீராமேசன் வீடு சென்று, அங்கு பள்ளிக்கூடமிருந்து வந்த கமலாவு

டன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில்
பார்த்து, இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடி
யதும்; பிறகுஅசூயனுடன் தன வீட்டிற்கு வந்து சமா
சாரங்களை வெளியிட்டு, அந்தப் பாபுவையும் ஹேம
நளினியையும் வருந்தச் செய்ததும், பிறகு இராமேசன்
கமலாவுடன் தன்னூர் செல்லப்புறப்பட்டு அசூயன்
பின்தொடர்ந்ததையும், அவனை ஏமாற்றிக் கப்பல் மார்
கமாய் வேறு இடம் சென்றதும்; கப்பல் சிறிதுதூரம்
போனபிறகு ஆற்றில் மணலில் சிக்கிக்கொண்டதும்,
சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை.)

சூரியாஸ்தமனமாயும் மேல்வானத்தில் சிவப்பு
வர்ணம் மாறவில்லை; ஆற்றங்கரை யோரத்திலிரு
ந்த புற் பூண்டுப் புதர்கள் செவ்வானத்திற்கு கரி
தோர் கரையிட்டாற் போலிருந்தது; இரை தேடி
ச்சென்ற பலாகங்கள், எங்கும் பரவுகின்ற இரு
ளிலே இரவிலுறையும் இடங்களான சிறு குட்டை
களை நாடி ஆகாயத்தில் பறந்து சென்றன; காக்கை
கள் தங்கள் கூடுகளை அடைந்தன; அவைகளி
டும் பேரவம் அமர்ந்தது. ஆற்றிலோடும் படகு
கள் எல்லாம் கரையோமாக நங்கூர மிட்டு நின்
றன; ஒரே யொரு பெரும் படகு மட்டும் ஆற்று
க்கு எதிர்ப் புறமாக இழுக்கப்பட்டு தூங்குவது
போல அமைதி யுற்றிருந்த நதியைப் பிளந்து
சென்றது.

சற்று நேரத்திற் கெல்லாம், இராமேசன் ஒரு
பிரம்பு நாற்காலியை இழுத்து கப்பலின் முன்புற
த்தில் போட்டுக்கொண்டு உதயமாகும் சந்திரனின்
மெல்லிய நிலவில் வீற்றிருந்தான். மேல்வானத்தில்
தயங்கி நின்ற பொன்னொளி மழுங்கி எங்கும்
நிலவு பரந்திருந்தது; இளநிலவின் மயக்கத்திற்
பட்டு பூமியே நீர் உகுத்து உரு மாறுவது போலி
ருந்தது; இராமேசன் "ஹேமா, ஹேமா" என்று
தன் மனதுள் ஸ்மரணை செய்தான்; காதல் நிறைந்த
அவ்வழகிய நாமம் அவனுடைய இருதயத்திலே
எங்கும் நிறைந்து அழியாத இன்பத்தைத்தந்தது;
அவளுடைய பெயரை உச்சரித்த மாத்திரத்தில்,
பிரிந்திருந்த தன் காதலியின் கண்கள்—தன்னைக்
கண்டு அத்தியந்த பிரேமையால் பனித்திருந்த அவ
ளுடைய கண்கள்— அவனது உள்ளத்திலிருந்த
துயரத்தி னிடையிலிருந்து பனியிடை வீசும்
ஒளிபோல் பிரகாசித்தன; அதுகண்டு அவனுடல்
நடுங்கிற்று. கண்களில் துயரம் ததும்பிற்று.

சென்ற இரண்டு வருஷங்களான அவனு
டைய வாழ்நாட்கள் ஹேமநளினி யிடம் தனக்
குள்ள காதலின் நிஜ ஸ்வரூபத்தைப் புலப்படுத்
திற்றல்லவா? தான் ஹேமநளினியை முதல்
முதல் சந்தித்ததை நினைத்துக் கொண்டான்; அத்
தினம் தன்வாழ்நாளில் ஓர் முக்கிய தினமாகும்
என்று அப்போது அவன் நினைத்தானோ, இல்லை
யே. யோகேந்திரன் எங்கள் வீட்டிற்கு வா
வென்று தன்னை யழைத்துச் சென்றதும், அப்
போது ஹேமநளினியை 'டீ' மேஜைப்புறத்தில் 'டீ'
வார்த்திருக்கக் கண்டு தான் வெட்கி மனங்குலைந்
திருந்ததும், பிறகு நாளடைவில் கொஞ்சம் கொஞ்
சமாய் சங்கோசம் தணிந்து அவளருகில் ஸஹஜ
மாய் நடந்து கொண்டதும் இப்போது இராமே
சன் ஞாபகத்திற்கு வந்தது; பிறகு, பழகப் பழக,
அவனுக்கு உத்ஸாகம் மேலிட்டு காதல் மொழி
களை அவன் பேசத் துவக்கியதையும், தான் படித்
திருந்த காதல் கதைகளுக் கெல்லாம் ஹேமநளி
னிதான் உரிய நாயகி என்று கருதி அவளையே
தன் மனத்துறையும் காதலியாகக் கொண்டதை
யும் நினைந்தான், காதலை யுணர்ந்தவன் என்று
மனத்துள் பெருமை கொண்டிருந்ததும்; தன்
கூட வாசிக்கும் பள்ளிக்கூடத்துப் பையன்கள்
காதல்ப் பாட்டுகளை பரீக்ஷைக்கு வாசிக்கிறார்
களே யொழிய, அவர்கள் தன்னைப் போல் காத
லின் நிஜ ஸ்வரூபத்தைக் காணும் பாக்கியம் பெற்
றனரோ என்று இருமாந்திருந்ததும் இப்போது
அவன் ஞாபகத்திக்கு வந்தது.

இவ்வித யோசனையினிடையே "ஆயினும் அக்
காலத்தில் காதலின் வெளிப்புறத்தை கண்டு மய
ங்கி யிருந்தேனே யொழிய, அந்தரங்க உண்மை
யை உணராதிருந்தேன்;" பிறகு திடீரென கமலா
தன் வாழ்நாளிடை வந்து அதை அழிக்க முடி
யாத ஒரு பெரும்புதிராகச் செய்த பின்பே, சுழ
ன்று குழம்பி தத்தளிக்கும் போது தானே, ஹே
மநளினிபால் தனக்கிருந்த காதலின் உண்மை யுரு
வெளிப்பட்டது.

இவ்விதம் தலையை கைமீது தாங்கி தணித்துக்
கொண்டு யோசனையில் இருந்தான். பின் வரும்
வாழ் நாள் அவன்முன் தோன்றியது. என்றும்
தீராத காதற் பிணியால் வருந்தி, வலையில் அகப்
பட்டு வெளிவரவேண்டுமென்று வீணாய் முயன்று
தத்தளிக்கும் மான்போல் இருந்தன இனி வர
நின்ற அவனது வாழ்நாட்கள்; ஒரு வேளை, பெரு
முயற்சி செய்தால் கட்டுண்டு கிடக்கும் வலையை
அறுத்து வெளி யேறலாமோ, என்னவோ?

இந்த எண்ணம் எழுந்த ஆவேகத்தில் தலை
தூக்கி நிமிர்ந்து பார்க்கவே, கமலா தன்னருகில்
வேறொரு பிரம்பு நாற்காலியின் முதுகில் கை வை
த்து நிற்கக் கண்டான். அவன் திடீரென நிமிர்ந்
ததும் அவள் திடுக்கிட்டு "தூங்கிக்கொண்டிருந்
தீர்கள் போலும்; உங்கள் தூக்கத்தைக் குலைத்து
விட்டேனே" என்று சொல்லி வருத்தத்துடன்
திரும்பிப் போகுமுன் "இல்லை, இல்லை, கமலா,
நான் தூங்கவில்லை; வா உட்காரு, உனக்கு ஒரு
கதைசொல்லுகிறேன்" என்று கூப்பிட்டான்.

கதை யென்றதும் கமலாவின் மனங்குளிர்ந்து
சந்தோஷமடைந்தது. அடுத்திருந்த நாற்காலியை
க்கிட்ட இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்
தாள். உண்மை முழுவதையும் அவளுக்குத்
தெரிவிக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்த
இராமேசன், திடீரெனத் தெரிவித்தால் அவள்
மனமுடைந்து போம், மெதுவாய் அவள் மனதை
பதப்படுத்த வேண்டும் என்றே, கதை சொல்லு
கிறேன் என்று அவளைக் கூவி அழைத்து உட்
கார வைத்தான்.

"ஒரே யொரு காலத்தில் ராஜபுத்திர வமிசம்
ஒன்று இருந்தது; அந்த வமிசத்தில்—" "எப்போ
து அது? நிரம்ப நாளுக்கு முன்னேயா?"

"ஆமாம்; வெகு காலத்திற்கு முன்னே; நீ
அப்போது பிறக்கக் கூட இல்லை."

கமலா: "ஆனால் நீங்கள் இருந்தீர்கள் அல்லவா,
பண்டைக் காலத்துத் தாத்தா வன்றோ நீங்கள்!
சரி, மேலே சொல்லுங்கள்"

இராமேசன்: "இந்த ராஜபுத்திரர்களுக்குள் ஒரு
அதிசயமான வழக்கம்; அதாவது, அவருள் யாரா
வது கல்லியாணம் செய்துகொள்ள வேண்டுமென்
றால், தான் நேரில் பெண் வீட்டிற்குப் போவதி
ல்லை; தன் உடைவாளை அங்கே யனுப்பி கல்லி
யாண மெல்லாம் அதை வைத்துக் கொண்டு நட
த்துவது; பிறகு கல்லியாணப் பெண் புக்ககம்
வந்ததும் மறுபடி ராஜபுத்திரனோடு விமரிசை
யாய் கல்லியாணத்தை நடத்து வார்களாம்." கம
லா: "இதென்ன இது, இப்படியொரு கல்லி
யாணமா?"

இராமேசன்: "எனக்கும் பிடிக்கவில்லை இந்த வழக்கம்; ஆனாலும் என்ன செய்யலாம்; கதையில் அப்படித்தான் இருக்கிறது. தாங்கள் நேரே பெண் வீட்டிற்குப் போவது மானக் குறைவு என நினைத்தார்கள் இந்த ராஜபுத்திரர்கள். இந்த ராஜா இருக்கிறான் அல்லவா, அவன், ஒரு நாள்—"

கமலா: 'அவன் எந்த ஊர் ராஜா என்று சொல்ல வில்லையே."

இராமேசன்: "மதுரைக்கு ராஜா, அவன் ஒரு நாள்—"

"அவன் பெயரை யன்றோ முதலில் சொல்ல வேண்டும்" என்றாள் கமலா; எல்லாவற்றையும் ஒழுங்காய்ச் சொல்லா விட்டால் விடமாட்டாள் என்று இராமேசனுக்கு முன்னமேயே தெரிந்திருந்தால் யோசனை செய்யாமல் இப்படி ஆரம்பித்திருக்க மாட்டான். அவன் சொல்லப் போகும் கதையைக் கேட்கவேண்டுமென்று கமலா இவ்வளவு ஆத்திரப் பட்டால் சில்லறை சமாசாரங்களைக் கூட ஒழுங்காய் சொல்லாவிடில் ஒப்ப மாட்டாள் என்று இராமேசனுக்குப் புலப்படவே,

"அவன் பெயரா? ரணஜித சிங்கன்" என்றான் ஒரு நிமிஷம் யோசனை செய்த பின். "மதுரைக்கு ராஜா ரணஜித சிங்கன்; சரி, மேலே சொல்லுங்கள்."

இராமேசன்: "ஒரு நாள் அந்த ராஜாவிடம் ஒரு வழிப்போக்கன் வந்தான்; அவன் வந்து வேறொரு ராஜாவுக்கு அதிக அழகு வாய்ந்த ஒரு பெண் இருக்கிறாள் என்று சொன்னான்."

கமலா: "அவர் எந்த ஊர் ராஜா?" இராமேசன்: "காஞ்சிபுரத்து ராஜா என்று வைத்துக் கொள்ளேன்."

கமலா "ஏன் அப்படி நினைத்துக்கொள்ள வேண்டும்; வாஸ்தவத்திலே, அவன் காஞ்சிபுரத்து ராஜா அல்லவோ?"

இராமேசன்: "ஆமாம், ஆமாம்; காஞ்சிபுரத்து ராஜாதான்; அவன் பெயர் தெரியுமா உனக்கு. அமரசிங்கன் என்று அவன் பெயர்."

கமலா: "அந்த பெண்ணின் பெயரைச் சொல்ல வில்லையே, அழகான பெண் இருக்கிறாள் என்றீர்களே"

இராமேசன்: "பார்த்தாயா; அதையும் சொல்ல மறந்து போனேன்; அவள் பெயரா,—அது சந்திரா என்று அவள் பெயர்."

கமலா: "என்ன ஞாபக மறைதி; என் பெயரைக்கூட மறந்து விடுவீர்கள் போலிருக்கிறதே!"

இராமேசன்: "அப்புறம்; அந்த அயோத்தி ராஜா இதைக் கேட்டதும்—"

கமலா: "அயோத்தி ராஜா எங்கிருந்து வந்தான்; மதுரை ராஜா வென்றே சொன்னீர்கள்?" இராமேசன்: "இதென்ன, இது! அவன் ஒரு தேசத்திற்கு மட்டும் தான் ராஜா என்று நினைத்தாயா, என்ன? அப்படியில்லை; அவன் மதுரைக்கும் ராஜா, அயோத்திக்கும் ராஜா."

கமலா: "இரண்டும் பக்கத்து தேசங்களாக்கும்?" இராமேசன்: "ஆமாம்; ஒன்றோடொன்று அடுத்தாற்போல்—"

இப்படியாக இவன் கதையைச் சொல்லிக் கொண்டு போம்போது கமலா அடிக்கடி ஒன்றுக்கொன்று பொருந்தாமல் சொல்வதை யெல்லாம் எடுத்துக் காட்டவே, கடைசியில் எல்லாவற்றையும் ஒருவிதமாய் மழுப்பி பின் வருமாறு கதையைச்சொல்லி முடித்தான்.

[தொடரும்]

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஓதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழிபெயர்த்தமைத்தது.

——— விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10 படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது.

——— விலை ரு. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணா 6.

கதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

ஸி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. ——— விலை ரூபா 1.

மானேஜர், சுதேசமித்திரன்,

சென்னை.

தக்ஷிணமித்திரன்

இதற்கு முன் (South Indian Mail) என்ற பெயருடன் இங்கிலீஷில் பிரசுரம் செய்யப்பட்டு வந்த பத்திரிகை சென்ற மாசியீ முதல் தமிழில் தக்ஷிணமித்திரன் யென்ற பெயருடன் பிரதி திங்கட்கிழமையும் மதுரையில் பிரசுரம் செய்யப் படுகிறது. மதுரை கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராயிருந்த ஸ்ரீமான் ஈ. அருணாசலமய்யர் ஆசிரியராவர்.

ஸ்திரிகளுக்காக நவீன நாவல் பத்திராதிபரால் எழுதப்பட்டு வருகிறது.

இதில் ராஜீய பொதுஜன நலம், கல்வி, சிற்பம் முதலிய எல்லா விஷயங்களைப் பற்றியும் அரிய வியாசங்களும் தென் இந்திய சரித்திர ஆராய்ச்சி கண்ணோட்டம் முதலிய விஷயங்களும் பலவூர் சங்கதிகளும் பிரசுரமாகும்.

சந்தா விபரம்

உள்ளூர் வருஷம் 1-க்கு	ரூ	5—0—0
வெளியூர் ,, ,, ,,		6—0—0
பினங்கு முதலிய அந்நிய நாடுகளுக்கு வருஷம் 1-க்கு	ரூ	8—0—0

மற்ற எல்லா விவரங்களும் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்

தக்ஷிணமித்திரன்

மதுரை.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினுல், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல திணுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனும்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோராதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்சள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	× 25"	ரூ 2½	முதல்	ரூ 3	வரை
,, 2.	12 ,,	× 27"	,, 4	,,	6	,,
,, 3.	16 ,,	× 34"	,, 6	,,	9	,,
,, 4.	18 ,,	× 36"	,, 8	,,	12	,,
,, 5.	20 ,,	× 44"	,, 11	,,	13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree'

கதர் சேலைகள் முதலியன.

10	கஜம்	× 45"	ரூ 4½	முதல்	ரூ 6	வரை
9½	,,	× 40"	,, 3	,,	5	,,
3	,,	× 1½ கஜ	,, 2	,,	3	,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக்கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

GOOD SEEDS

As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment. We have just the right kind of seeds for Indian climate both flower and vegetable.

Beautifully illustrated large descriptive catalogue free on application. (Please mention this paper when writing and correspond in English only.)

Pestonjee P. Pocha & Sons
Seed Merchants, POONA.

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras
(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராகச் சேர்ந்து நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ1000 பாலிஸிக்கு ரூ15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
Manager.

K. S. MUTHIAH & Co.,

Silk House, Benares City.

Branches **:—MADRAS & TINNEVELLY.**

எங்களிடம் சகல விதமான பட்டு பீதாம்பர புடவைகள், நாகரீகமான புதிய மாதிரி புடவைகள் (நவீன கலர்களில்) ரவிக்கை குட்டைகள், வெண்பட்டு திணுசுகள், நார்மடி திணுசுகள், ருத்திராக்ஷ மாலைகள், முதலிய சகல திணுசுகளும் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். உடனே எங்கள் கேட்லாக்கை தருவித்து பாருங்கள்.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
சில்க் ஹவுஸ், காசி.

பிராஞ்சு:—தபாற் பெட்டி 99, சென்னை.
போன் 1216 சென்னை.